| | |
|---|---|
| மையம் : ______________ | பெயர்: ______________ |
| மேற்பார்வையாளர் கையொப்பம்: ______________ | பதிவு எண்: ______________ |
| | நாள் : ______________ |

**தமிழ் இணையக் கல்விக்கழகம்**

**சான்றிதழ்க் கல்வி**

**BA00 மேல்நிலை**

**எழுத்துத் தேர்வு – மே–சூன், 2019**

**நேரம் : 1.30 மணி** **மதிப்பெண் : 50**
Time : 1.30 hrs. Total Marks : 50

**பகுதி – 1**

**I. பின்வரும் உரைநடைப் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**
Read the following text and answer the questions given below in a single line. **(5x1=5)**

திருக்குறள் தமிழர்களின் மறை என்றும், உலகப் பொதுமறை என்றும் சொல்லப்படுகிறது. திரு+குறள் = திருக்குறள். 'திரு' என்னும் சொல் பெருமை, சிறப்பு, மேன்மை என்னும் பல பொருள்களை உணர்த்தும். குறள் என்பது இரண்டடி வெண்பாவைக் குறிக்கும். இதில், 133 அதிகாரங்கள் 1330 குறள்கள் உள்ளன.

**வினாக்கள் :**

1. திருக்குறளுக்கு வழங்கும் வேறு பெயர்கள் யாவை?

______________________________

2. திருக்குறளில் உள்ள அதிகாரங்கள் எத்தனை?

______________________________

3. திருக்குறளில் உள்ள மொத்தப் பாக்கள் எத்தனை?

______________________________

4. 'திரு' என்பதற்கு வழங்கப்படும் வேறு பெயர்கள் ஏதேனும் 2 எழுதுக.

______________________________

5. குறள் என்பது எதனைக் குறிக்கிறது?

______________________________________________

**II. பின்வரும் பாடல் பகுதியைப் படித்துவிட்டு அதன் கீழே தரப்பட்டுள்ள வினாக்களுக்கு ஒரு வரியில் விடை தருக.**

Read the following poem and answer the questions given below in a single line.

**(5x1=5)**

காயக் கண்டது சூரியகாந்தி
கலங்கக் கண்டது
வெண்தயிர்க் கண்டம்
மாயக் கண்டது நாழிகை வாரம்
மறுகக் கண்டது
வான்சுழி வெள்ளம்
சாயக் கண்டது காய்குலைச் செந்நெல்
தணிப்பக் கண்டது
தாபதர் உள்ளம்
தேயக் கண்டது உரைத்திடும் சந்தனம்
சீவல மங்கைத்
தென்கரை நாடே!

**வினாக்கள்**

1. காய்வது எது?

______________________________________________

2. கலங்குவது எது?

______________________________________________

3. சாய்வது எது?

______________________________________________

4. தேய்வது எது?

______________________________________________

5. இப்பாடலில் குறிப்பிடப்படும் நாடு எது?

______________________________________________

**III. பின்வரும் சொற்களைப் பொருள் தருமாறு சொற்றொடரில் அமைக்க.**

Form meaningful sentences using the following words. **(5x2=10)**

1. அறிவுரை

2. விரைவாக

3. மறந்து விடாதே

4. வெளிப்படையான

5. எதிர்கொள்

**IV. பின்வரும் வினாக்களுள் ஐந்து வினாக்களுக்கு மட்டும் சில வரிகளில் விடை தருக.**

Answer any Five of the following questions in a few lines. **(5x4=20)**

1. உயிரெழுத்து என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.
2. தாலாட்டுப் பாடல் – விளக்குக.
3. பால் என்பதன் பொருள் யாது? அதன் வகைகளை விளக்குக.
4. கவிமணி தேசிய விநாயகம் பிள்ளை – குறிப்பு வரைக.
5. போட்டிகளுக்குத் தயார் செய்வது குறித்து விஜயலட்சுமி கூறுவன யாவை?
6. ஏனாதி நாதரின் பண்பு நலன்களை எழுதுக.
7. தாயின் கடமை என்ன? அவள் பெற்ற குழந்தைகளின் கடமை என்ன?

8. 'முன்னேற' என்ற தலைப்பிலான இப்பாடலில் இடம்பெறும் அறிவியல் கருத்துகள் ஏதேனும் நான்கு எழுதுக.
9. கணிப்பொறி என்றால் என்ன? அதன் அடிப்படைப் பகுதிகளை எழுதுக.
10. வாழ்த்து என்றால் என்ன? அதன் வகையைச் சுட்டுக.

V பின்வரும் பொருள்களுள் ஏதேனும் ஒன்று பற்றிக் கடிதம் எழுதுக.

Write a letter on any one of the given subjects. **(1x10=10)**

1. இறைவாழ்த்து அல்லது மொழி வாழ்த்துக் குறித்து உன் நண்பனுக்குக் கடிதம் எழுதுக.
2. நீ நாளேடு பற்றி அறிந்து கொண்டதைப் உன் நண்பனுக்குக் கடிதம் வரைக.
3. கணிப்பொறிக் குறித்துத் தந்தைக்குக் கடிதம் எழுதுக.

*****